**செய்தி வெளியீடு எண் :1042** **நாள்: 25.06.2022**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டில் 14 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதில், பாரதியார் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு சென்னை பாரதி நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித் துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் 04.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளைப் புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக இருபத்தோராவது வாரமான இன்று (25.06.2022) முனைவர் இதயகீதம் இராமானுஜம் அவர்கள் "பாரதி ஒரு பைந்தமிழ்த் தேர் சாரதி" எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். அதனைத் தொடர்ந்து வானவில் பண்பாட்டு மையம் சார்பாக நிருத்யாஞ்சலி கலைப் பள்ளி மற்றும் திருமதி.காவேரி ரமேஷ் குழுவினரின் பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு.வி.என்.அண்ணாதுரை அவர்கள் வரவேற்றுப் பேசினார். வானவில் பண்பாட்டு மைய உறுப்பினர் திருமதி.சாந்தி ஜெகத்ரட்சகன் அவர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிறைவாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.எஸ்.ரமேஷ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in